**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

முன்னிலை – திரு.P. காமராசு, B.A., B.L.,

நீதித்துறை நடுவர்,

உத்தமபாளையம்.

**2026 ஜூலை–13–ம் நாள் திங்கள்கிழமை**

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் ஆனி–29–ம் நாள்

**<u>ஆண்டு பட்டிகை வழக்கு எண்.102/2022</u>**

**<u>CNR.No.TNTH07-003669-2022</u>**

<table>
<tr><td>குற்றமுறையீட்டாளர்</td><td>–</td><td>அரசு சார்பாக – காவல் ஆய்வாளர், உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையம், குற்ற எண்.1/2021.</td></tr>
<tr><td colspan="3">// எதிர் //</td></tr>
<tr><td>எதிரிகள்</td><td>–</td><td>1. முகமது ஜமீர் (வயது 28/2021),<br>த/பெ.முகமது கபீப்,<br>6-3-183/2, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>2. நாகூர் மீராள் (வயது 49/2021),<br>க/பெ.முகமது கபீப்,<br>6-3-183/2, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>3. முகமது கபீப் (வயது 53/2021),<br>த/பெ.அப்துல் கரீம்,<br>6-3-183/2, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>4. ரிஸ்வான தாஜ் (வயது 25/2021),<br>த/பெ.முகமது கபீப்,<br>6-3-183/2, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>5. முகமது காதர் பீர் ஒலி (வயது 29/2021),<br>த/பெ.முகமது சலீம், 6-3-51, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>6. ரோசன் சபீகா,<br>த/பெ.ஜவஹர்அலி, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>7. ஜவஹர்அலி,<br>த/பெ.முத்தலிப்,</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>8. கல்பாத்,<br>க/பெ.ஜவஹர்அலி,<br>இந்திரா நகர், உத்தமபாளையம். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 494, 506(i) இதச–ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 494, 506(i) இதச–ன் கீழ் |
| தீர்மானம் | – | முடிவாக, எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 494, 506(i) இதச–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. |

இவ்வழக்கானது 08.06.2022–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணையின் போது, குற்றம் முறையிடுபவர் தரப்பில், அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2, உத்தமபாளையம் அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.அஜ்மல்கான், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சி, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## தீர்ப்புரை

### இறுதியறிக்கையின் சுருக்கம்

1) 1ம் சாட்சிக்கும், 1ம் எதிரிக்கும் 01.10.2017ம் தேதி திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து 1ம் சாட்சியை, 1 முதல் 5 எதிரிகள் ஒன்று சேர்ந்து கொண்டு நீ என் மகனோடு வாழ தகுதியற்றவள் என்றும், உடலாலும் மனதாலும் வாதியை தற்கொலைக்கு துாண்டும் வகையில் வன்கொடுமை செய்து மீறி நீ என் மகனோடு வாழ்ந்தால் உன்னை கொலை செய்துவிடுவோம் என கொலை மிரட்டல் விடுத்தும், 1ம் எதிரிக்கும், 6ம் எதிரிக்கும் திருமணம் செய்து வைத்த எதிரிகளின்

செயல் ச/பி 498(A), 494, 506(i) இதச–ன் கீழ் உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) மேற்படி இறுதியறிக்கையை பரிசீலனை செய்து, இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு வழக்காவணங்களின் நகல்கள் குவிமுச 207–ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிகளுக்கு போதிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு, மேலும் ச/பி 498(A), 494, 506(i) இதச–கீழ் குற்றச்சாட்டுகள் குவிமுச பிரிவு 240(1)–ன் படி வினவியபோது, எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்தார்கள். எனவே வழக்கு விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

3) எதிரிகள் மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்க, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை.

**<u>4) அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்று ஆவணங்களின் படி வழக்கு சுருக்கம்–</u>**

4.1) எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை பொறுத்து, அ.சா.1 நஷ்ரின் பாத்திமா தனது சாட்சியத்தில், வழக்கின் 1, 2, 3, 4 எதிரிகள் தனது கணவர் மற்றும் அவரது குடும்பத்தார்கள் ஆவார்கள். வழக்கின் 6–வது எதிரி தனது கணவர் 2–வதாக திருமணம் செய்து கொண்ட பெண் ஆவார். 7, 8 எதிரிகள் 6–வது எதிரியின் பெற்றோர்கள் ஆவார்கள். தனக்கும், 1–வது எதிரிக்கும் கடந்த 01.10.2017–ம் தேதி JSD மகாலில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்பு தான் உத்தமபாளையத்தில் உள்ள தனது கணவரின் வீட்டில் கூட்டுக்குடும்பாக அவரது பெற்றோருடன் வசித்து வந்தேன். அதே வீட்டின் மாடியில் தனது நாத்தனார் மற்றும் அவரது கணவர் வசித்தார்கள். திருமணமான நாளிலிருந்தே 1 முதல் 4 எதிரிகள் தன்னை அனைத்து வேலைகளையும் செய்ய சொல்லி, அடிப்படை தேவைகளான சாப்பாட்டிலும் தன்னை கொடுமை செய்தார்கள். தனக்கு தனது மாமியார் சரிவர சாப்பாடு கொடுக்கவில்லை. திருமணமான 40 நாட்கள் கழித்து தான் கூடலூரில் உள்ள ஜமாத்தில் உள்ள மேற்படி விபரங்களை சொல்லி, அங்கே உள்ள பெரியவர்கள் முன்னிலையில் 1 முதல் 4

எதிரிகள் இதன் பின்பு இவ்வாறு நடக்காது எனக்கூறி தன்னை அழைத்து சென்றார்கள். அதன் பின்பு தன்னை நன்றாக பார்த்துக்கொண்டார்கள். தான் கருவுற்று குழந்தை பிறந்து கடந்த 04.02.2019–ம் தேதி குழந்தையுடன் தனது கணவர் வீட்டிற்கு தான் சென்றேன். பின்னர் 16.02.2019–ம் தேதி தனது கணவர், மாமனார், மாமியார் தன்னை வீட்டிற்குள் வைத்து அடைத்து, தனது கைப்பேசியை பறித்து கொடுமை செய்தார்கள். மேலும், எதிரிகள் நாங்கள் சொல்வதை தான், தான் கேட்க வேண்டும் என்றும், தனது தரப்பில் இருந்து யாரும் அவர்கள் வீட்டிற்கு வரக்கூடாது என்றும், தானும் எங்கும் செல்லக்கூடாது என்றும் கூறினார்கள். தன்னை தனியறையில் அடைத்து வைத்தார்கள். தான் அவர்களுக்கு தெரியாமல் தனது அம்மாவிற்கு போன் செய்து, மேற்படி விபரங்களை கூறிக்கொண்டுயிருந்த போதே தனது மாமனார் அந்த அறையின் கதவை தட்டி நீ உனது வீட்டில் போய் சாவு நீ சாவதற்காக தான் வீடு கட்டி வைத்திருக்கிறேன் என கூறினார்.

4.2) தனது அம்மா அன்றைய தினமே ஜமாத்திலிருந்து பெரியவர்களுடன் வந்து விட்டார்கள். தன்னை மேற்படி ஜமாத் பெரியவர்களுடன் தனது அம்மா வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். மீண்டும் மறு நாள் காலையில் ஜமாத் பெரியவர்கள் வைத்து பேசி தன்னையும், தனது கணவரையும் தனது மாமனார் வீட்டின் மாடியில் தனிக்குடித்தனமாக கடந்த 01.07.2019–ம் தேதி வைத்தனர். தன்னை அங்கு வைத்து பேசவிடாமல் அடிக்கடி சண்டை செய்து, மன ரீதியாக கொடுமை செய்தார். கடந்த 04.10.2019–ம் தேதி மீண்டும் தன்னை தனது அம்மா வீட்டிற்கு அனுப்பி வைத்தார். அதன் பின்பு தான் தனது அம்மா வீட்டில் இருந்த போது போதிய கால அவகாசம் கொடுக்காமல் அவர்களாகவே தனக்கு முதல் தலாக் அனுப்பி விட்டார்கள். மேற்படி தலாக் 3 முறை அனுப்பப்பட்டு அதற்கு தான் மறுப்பு தெரிவித்து அனுப்பி வைத்தேன். 2 தலாக் அனுப்பியவுடன் தான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அதன் பின்பு எதிரிகள் தரப்பில் இருந்து விவாகரத்து வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் போதே தான் 1–வது எதிரியுடன் சேர்ந்து வாழ விரும்புகிறேன் என தெரிந்தும், 6–வது எதிரியான ரோசன் சபிகா என்பவரை அவரது பெற்றோர்களான 7, 8 எதிரிகள் 1–வது எதிரிக்கு கடந்த 10.01.2021–ம் தேதி சென்னையில் வைத்து

திருமணம் செய்து வைத்துள்ளனர். மேற்படி திருமணத்திற்கு முந்தைய நாள் உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 7, 8 எதிரிகள் தங்களது மகளை 1–வது எதிரிக்கு திருமணம் செய்து வைக்கமாட்டோம் என எழுதிக்கொடுத்து சென்றார்கள். 2–வது திருமணத்திற்கு பின்பு சுமார் 40 நாட்கள் வெளியூரிலேயே தங்கியிருந்தார்கள். கடந்த 01.03.2021–ம் தேதி வரவேற்பு நிகழ்ச்சி உத்தமபாளையம் பைபாஸ்சில் உள்ள அவர்களது தொழிற்சாலையில் நடத்தினார்கள். அன்றைய தினமே மதியம் 01.00 மணியளவில் தான் தனது பெற்றோர், தனது தம்பி மற்றும் உறவினர்கள் அனைவரும் சென்று மேற்படி எதிரிகளுடன் மேற்படி திருமணம் குறித்து, தனது கணவரின் சட்டையை பிடித்து தான் கேட்டபோது, தனது மாமனார் தன்னை தள்ளிவிட்டு, தன்னை கொல்லாமல் விடமாட்டேன் உன் சாவு தன் கையில் தான் என சொல்லி கம்பியை காண்பித்து மிரட்டினார். அதன்பின்பு உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அன்றைய தினம் காவல் நிலையத்தில் வைத்து இருதரப்பினரையும் அழைத்து பேசிய போது எதிரிகள், தனக்கு ரூ.18 லட்சம் பணம் தருவதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்தார்கள். ஆனால், அந்த தேதியன்று அவர்கள் வரவில்லை, பணத்தையும் தரவில்லை என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.3) அ.சா.2 அஜ்மல்கான், அ.சா.3 ராபியா பேகம், அ.சா.4 முகமது அசாருதீன் ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில், அ.சா.1ன் சாட்சியத்தை அனுசரித்தே சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.5 பசீர் அகமது தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான். 02.05.2021–ம் தேதி மாலை 06.00 மணியளவில் உத்தமபாளையம் RDO ஆபீஸ் உள்ள இந்திரா நகர் காலனியில் உள்ள தனது சித்தப்பா மகள் நஷ்ரீன்பாத்திமா–க்கு பிரச்சனை என தெரிந்து, தான் அங்கே சென்றபோது போலிசார் அந்த இடத்தில் படம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக இருக்கும் படி கேட்டார்கள். நானும், தனது சித்தப்பா சையது அபுதாகீர்–ம் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.4) அ.சா.6 மரிய பாக்கியம் தனது சாட்சியத்தில், தான் தற்போது பேரையூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.02.2021–ம் தேதி 16.00 மணிக்கு உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலைய பெண் காவலர் திருமதி.சுமதி நிலைய பொறுப்பில் இருந்த போது, நிலையத்தில் ஆஜராகி முகமது ஜமீர் என்பவரின் மனைவி நஷீரின் பாத்திமா என்பவர் கொடுத்த புகாரை பெற்று பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 1/2021 இதச பிரிவு 498(A), 406 and 4, 6 of DP Act கீழ் படி வழக்கு பதிவு செய்தார். பின்னர் அசல் ஆவணங்களை இந்நீதிமன்றத்திற்கும், சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துவிட்டு, வழக்கு கோப்பை விசாரணைக்காக தனது பார்வைக்கு வைத்தார். வழக்கு கோப்பை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் நஷீரின் பாத்திமா, அஜ்மல்கான், ராபியாபேகம், முகமது அசாருதீன் ஆகியோரை விசாரித்து தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சையது அப்தாகீர், பசீர் அகமது ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து, பின்னர் சாட்சிகள் சையது அப்தாகீர், பசீர் அகமது, பெண் காவலர் 1888 சுமதி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரிகள் மாண்புமிகு தேனி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. மேற்படி வழக்கில் வரதட்சணை கொடுமை உள்ளதா என விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டி, மாவட்ட சமூக நல அலுவலர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைத்தேன். இத்துடன் தனது விசாரணையை முடித்து, வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் மங்கையர்திலகம் அவர்கள் வசம் ஒப்படைத்தேன் என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.5) அ.சா.7 மங்கையர் திலகம் தனது சாட்சியத்தில், தான் தற்போது மதுரை தெப்பக்குளம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.02.2021–ம் தேதி உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த தலைமை காவலர் திருமதி.சுமதி அவர்கள் நிலையத்தில் ஆஜராகி நஷிரீன் பாத்திமா என்பவர் அளித்த புகாரினை பெற்று குற்ற எண் 01/2021 இதச பிரிவு

498(A), 406 IPC மற்றும் 4, 6 DP Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அச்சமயத்தில் ஆய்வாளராக இருந்த மரியபாக்கியம் அவர்களது பார்வைக்கு சமர்ப்பித்தார். சாட்சிகள் நஷிரீன் பாத்திமா, அஜ்மல்கான், ராபீயா பேகம், முகமது அசாரூதின் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் சம்பவ இடம் பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் சாட்சிகள் சையது அபுதாகீர், பசீர் அகமது ஆகியோர் முன்னிலையில் தயார் செய்து, அந்த சாட்சியை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் தான் இந்த வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு எடுத்து, சாட்சிகள் ஷிமலா தேவி, பாலமுருகன், சுமதி ஆகியோர்களை விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். தனது விசாரணையின் முடிவில் எதிரிகள் அ.சா.1 ஐ உடலாலும், மனதாலும் வன்கொடுமை செய்ததாகவும், நம்பிக்கை மோசடி செய்ததாக மட்டுமே தெரியவந்ததால் வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 498(A), 494, 506(i) IPC கீழ் மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து அறிக்கை சமர்ப்பித்தேன். எதிரிகள் முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை என்றும் சாட்சியளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

5) அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்ட பிறகு, வழக்கில் எதிரிகளுக்கு எதிராக உள்ள அரசு தரப்பு சாட்சியங்கள் குறித்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1) (ஆ)ன் கீழ் கேள்வி கேட்டபோது, எதிரிகள் அவை பொய் சாட்சிகள் என்றும், தங்களது தரப்பில் சாட்சி உண்டு என்றும் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**7) வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள்:-**

**(i) எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் தகுநிலை**

**ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?**

**(ii) அவ்வாறு நிரூபிக்கப்பட்டிருந்தால் எதிரிகளுக்கு வழங்க கூடிய தண்டனை விபரம் என்ன?**

7.1) 1ம் எதிரியான முகமது ஜமீர் என்பவருக்கும், அ.சா.1 ஆகிய நஸ்ரின் பாத்திமா என்பவருக்கும், 01.10.2017ல் திருமணம் நடைபெற்று, எதிரிகள் அனைவரும் அ.சா.1னினை துன்புறுத்தினார்கள் என்றும், 1ம் எதிரி இரண்டாம் திருமணமாக 6ம் எதிரியை திருமணம் செய்து கொண்டார் என்றும், 1ம் எதிரிக்கும், 6ம் எதிரிக்கும் இடையேயான திருமணத்தின் போது எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கே இவ்வழக்காகும். எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 498(A), 494, 506(i) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளன.

7.2) எதிரிக்கு எதிரான இதச பிரிவு 498(A)ன் கீழான குற்றச்சாட்டினை பொறுத்தவரையில், அ.சா.1னினை, தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்கோ அவரது உடல் நலத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையில் எதிரிகள் செயல்பட்டோ அல்லது சட்டத்திற்கு முரணான வகையில் சொத்தினை பெறுவதற்காகவோ அல்லது விலைமதிப்புள்ள பொருளை பெறுவதற்காகவோ எதிரிகள் துன்புறுத்தியிருக்க வேண்டும். இவ்வழக்கின் அ.சா.1 தனது சாட்சியத்தில், எவ்வித சொத்தினையும் பெறுவதற்காக எதிரிகள் தன்னை துன்புறுத்தியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும், எதிரிகளின் செயல்களால் தனது உடலுக்கு ஊறு ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை. இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.7ன் குறுக்கு விசாரணையின் போது, இவ்வழக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலர் அளித்த அறிக்கை குறித்து வினவப்பட்டு, அ.சா.7 ஒப்புக்கொண்டதால் மாவட்ட சமூக நல அலுவலர் அறிக்கை எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7.3) எ.த.சா.ஆ.1 ஆவணமான மாவட்ட சமூக நல அலுவலர் அளித்த அறிக்கையில் எதிரிகள், அ.சா.1னினை குடும்ப வன்முறை மற்றும் வரதட்சணை கொடுமை செய்யவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 1ம் எதிரிக்கும்,

அ.சா.1க்கும் இடையே கருத்து வேறுபாடு உள்ளதாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியவர்களின் சாட்சியங்களின் படி, 1 மற்றும் 6ம் எதிரியின் திருமணத்தின் போது நிறைய நபர்கள் இருந்தார்கள் என புலனாகிறது. ஆனால் அவர்களில் ஒருவரை கூட சாட்சியாக விசாரிக்க அரசுத்தரப்பு தவறிவிட்டது. இது குறித்து அரசுத்தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. ஆகவே, எதிரிக்கு எதிரான இதச பிரிவு 498(A)ன் கீழான குற்றச்சாட்டை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7.4) எதிரிக்கு எதிரான இதச பிரிவு 494ன் கீழான குற்றச்சாட்டினை பொறுத்தவரையில், அரசுத்தரப்பு வழக்கின் படி 1ம் எதிரி 6ம் எதிரியை இரண்டாம் திருமணம் செய்துள்ளார் என்பதே ஆகும். ஆனால் 1 மற்றும் 6 எதிரிகளுக்கு இடையேயான நடைபெற்ற திருமணத்தின் போது, அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோர்கள் திருமண நடைபெற்ற இடத்திற்கு சென்று கேட்டதாகவும், அப்போது பிரச்சனை ஏற்பட்டு எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோர்கள் சாட்சியமளித்துள்ளார்கள். ஆனால், 1ம் எதிரியின் இரண்டாம் திருமணம் குறித்து திருமண அழைப்பிதழ், திருமண புகைப்படம் போன்றவை தாக்கல் செய்யப்படவில்லை. 1ம் எதிரிக்கும், 6ம் எதிரிக்கும் நடைபெற்ற திருமணத்தின் பயனாக 04.12.2021ம் தேதி அகமது ஜயான் என்ற குழந்தை பிறந்ததாகவும், குழந்தையின் பிறப்பு சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், 1ம் எதிரிக்கும், 6ம் எதிரிக்கும் இடையே நடைபெற்ற திருமணம் குறித்த ஆவணங்களான திருமண அழைப்பிதழ், திருமண வீடியோ, திருமண புகைப்படம், குடும்ப அட்டை போன்ற ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை.

7.5) அ.சா.8 ஆவணமான பிறப்பு சான்றிதழ் அடிப்படையில் மட்டுமே 1ம் எதிரி, 6ம் எதிரியை இரண்டாம் திருமணம் செய்து கொண்டார் என உறுதி செய்ய இயலாது. இன்றைய காலகட்டத்தில் திருமணம் செய்யாமலே ஆணும், பெண்ணும் சேர்ந்து

குழந்தை பெற்றுக்கொள்கின்றனர். அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியவர்களின் சாட்சியங்களின் படி, 1 மற்றும் 6ம் எதிரியின் திருமணத்தின் போது நிறைய நபர்கள் இருந்தார்கள் என புலனாகிறது. ஆனால் அவர்களில் ஒருவரை கூட சாட்சியாக விசாரிக்க அரசுத்தரப்பு தவறிவிட்டது. இது குறித்து அரசுத்தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. 1ம் எதிரி, 6ம் எதிரியை இரண்டாம் திருமணம் செய்துகொண்டார் என போதிய ஆவணம் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் அரசுத்தரப்பு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆகவே, எதிரிக்கு எதிரான இதச பிரிவு 494ன் கீழான குற்றச்சாட்டை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7.6) எதிரிக்கு எதிரான இதச பிரிவு 506(i)ன் கீழான குற்றச்சாட்டினை பொறுத்தவரையில், அ.சா.1 தனது சாட்சியத்தில் உன் சாவு என் கையில் தான் என கம்பியை காண்பித்து 3ம் எதிரி மிரட்டியதாக சொல்லியுள்ளார். ஆனால், அத்தகைய கம்பி கைப்பற்றப்படவும் இல்லை, சமர்பிக்கபடவுமில்லை. இது குறித்து எவ்வித விளக்கமும் அரசுத்தரப்பில் அளிக்கப்படவுமில்லை. மேலும், 3ம் எதிரியின் செயலால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என தான் உண்மையில் அச்சப்பட்டதாக அ.சா.1 தனது சாட்சியத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை. அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியவர்களின் சாட்சியங்களின் படி, 1 மற்றும் 6ம் எதிரியின் திருமணத்தின் போது நிறைய நபர்கள் இருந்தார்கள் என புலனாகிறது. ஆனால் அவர்களில் ஒருவரை கூட சாட்சியாக விசாரிக்க அரசுத்தரப்பு தவறிவிட்டது. இது குறித்து அரசுத்தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. ஆகவே, எதிரிக்கு எதிரான இதச பிரிவு 506(i)ன் கீழான குற்றச்சாட்டை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 494, 506(i) இதச–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என

தீர்மானித்து, எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின் இன்று 13.07.2026–ம் தேதி இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/திரு.P.காமராசு,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

**(Statement Under rule 106 of Criminal Rules of Practice)**

| | | |
|---|---|---|
| 1. | அரசு சார்பாக – காவல்நிலையம் குற்ற எண்: | அரசு சார்பாக – காவல் ஆய்வாளர், உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையம், குற்ற எண்.1/2021. |
| | **Description of the accused** | |
| 2. | பெயர் | 1. முகமது ஜமீர் (வயது 28/2021),<br>த/பெ.முகமது கபீப்,<br>6–3–183/2, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>2. நாகூர் மீராள் (வயது 49/2021),<br>க/பெ.முகமது கபீப்,<br>6–3–183/2, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>3. முகமது கபீப் (வயது 53/2021),<br>த/பெ.அப்துல் கரீம்,<br>6–3–183/2, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>4. ரிஸ்வான தாஜ் (வயது 25/2021),<br>த/பெ.முகமது கபீப்,<br>6–3–183/2, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>5. முகமது காதர் பீர் ஒலி (வயது 29/2021),<br>த/பெ.முகமது சலீம்,<br>6–3–51, இந்திரா நகர், உத்தமபாளையம். |

| | | | |
|---|---|---|---|
| | | 6. ரோசன் சபீகா,<br>த/பெ.ஜவஹர்அலி,<br>இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>7. ஜவஹர்அலி,<br>இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>8. கல்பாத்,<br>இந்திரா நகர், உத்தமபாளையம். | |
| 3. | கணவர்/<br>தகப்பனார் பெயர் | -- | |
| 4. | தொழில் | -- | |
| 5. | முகவரி | -- | |
| 6. | வயது | -- | |
| | **தேதிகள்** | | |
| 7. | குற்ற நிகழ்வு | | 01.10.2017 |
| 8. | புகார் நாள் | | 05.02.2021 |
| 9. | கைது செய்யப்பட்ட நாள் | | AB |
| 10. | பிணையில் வந்த நாள் | | --- |
| 11. | விசாரணை தொடங்கிய நாள் | | 22.10.2024 |
| 13. | விசாரணை முடித்த நாள் | | 06.07.2026 |
| 14. | தீர்ப்பு விபரம், நாள் | | 13.07.2026 (குற்றவாளிகள் இல்லை) |
| 15. | தீர்ப்பு நகல் | | 13.07.2026 |
| 16. | காலதாமத்திற்கான விளக்கம் | | --- |

**வழக்கு சுருக்கம்**

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021– நாளிட்ட R.O.C.No.814/2020/RG/F1(P.Dis.No.36/2021)உத்தரவின் படி CASE SUMMARY கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.**

| வ. எண் | விபரங்கள் | குறிப்புகள் |
|---|---|---|
| 1. | குற்ற நிகழ்வு நாள்:<br>புகார் நாள்: | 01.10.2017<br>05.02.2021 |

| | | |
|---|---|---|
| 2. | குற்ற எண்:<br>காவல் நிலையம்: | அரசு சார்பாக – காவல் ஆய்வாளர், உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையம், குற்ற எண்.1/2021. |
| 3. | குற்றச்சாட்டப்பட்டவரின் பெயர் மற்றும் அல்லது கூடுதல் குற்றச்சாட்டப்பட்டவரின் பெயர்கள் எதிரிகளின் பெயர், வயது, | 1. முகமது ஜமீர் (வயது 28/2021),<br>த/பெ.முகமது கபீப்,<br>6–3–183/2, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>2. நாகூர் மீராள் (வயது 49/2021),<br>க/பெ.முகமது கபீப்,<br>6–3–183/2, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>3. முகமது கபீப் (வயது 53/2021),<br>த/பெ.அப்துல் கரீம்,<br>6–3–183/2, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>4. ரிஸ்வான தாஜ் (வயது 25/2021),<br>த/பெ.முகமது கபீப்,<br>6–3–183/2, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>5. முகமது காதர் பீர் ஒலி (வயது 29/2021),<br>த/பெ.முகமது சலீம்,<br>6–3–51, இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>6. ரோசன் சபீகா,<br>த/பெ.ஜவஹர்அலி,<br>இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>7. ஜவஹர்அலி,<br>இந்திரா நகர், உத்தமபாளையம்.<br><br>8. கல்பாத்,<br>இந்திரா நகர், உத்தமபாளையம். |
| 4. | எதிரிகள் காவல் அடைப்பு நாள் | AB |
| 5. | எதிரிகள் பிணையில் வெளியே வந்த நாள்(Ordinary Bail, Anticipatory Bail) | --- |
| 6. | குற்ற இறுதியறிக்கை நாள் | 10.03.2022 |
| 7. | வழக்கு தாக்கல் செய்த நாள் | 08.06.2022 |
| 8. | குற்றச்சாட்டு வனைந்த | 22.10.2024 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நாள் | | | |
| 9. | இடைக்கால மனுக்கள் விபரம் (Warrant Recall) | --- | | |
| 10. | எதிரி தலைமறைவு விபரம் | --- | | |
| 11. | மேல் நீதிமன்ற தடை உத்தரவு ஏற்பட்டிருந்தால் அதன் விபரம் | --- | | |
| 12. | முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை விசாரித்த நாட்கள் | விசாரித்த நாட்கள் | | |
| | | அரசு தரப்பு சாட்சிகளின் எண்ணிக்கை | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1. | 01.07.2025 | 01.07.2025 |
| | | அ.சா.2. | 01.07.2025 | 01.07.2025 |
| | | அ.சா.3. | 01.07.2025 | 01.07.2025 |
| | | அ.சா.4. | 01.07.2025 | 01.07.2025 |
| | | அ.சா.5. | 01.07.2025 | 01.07.2025 |
| | | அ.சா.6. | 28.01.2026 | 28.01.2026 |
| | | அ.சா.7. | 20.05.2026 | 20.05.2026 |
| 13. | பிரிவு 313(1)(b) கேள்வி கேட்ட நாள் | 29.06.2026 | | |
| 14. | தாமத வழக்குகளின் விபரம்(Delay Reason) | --- | | |

## பிற்சேர்க்கை

**அரசு தரப்பு சாட்சிகள்–**

1. அ.சா.1 ... திருமதி.நஷ்ரின் பாத்திமா
2. அ.சா.2 ... திரு.அஜ்மல்கான்
3. அ.சா.3 ... திருமதி.ராபியா பேகம்
4. அ.சா.4 ... திரு.முகமது அசாருதீன்
5. அ.சா.5 ... திரு.பசீர் அகமது
6. அ.சா.6 ... திருமதி.மரிய பாக்கியம்
7. அ.சா.7 ... திருமதி.மங்கையர் திலகம் (காவல் ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்–</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | – | 05.02.2021 ம் தேதியிட்ட புகாரில் உள்ள கையொப்பம் |
| 2. | அ.சா.ஆ.2 | – | பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ.3 | – | 05.02.2021 ம் தேதியிட்ட புகார் |
| 4. | அ.சா.ஆ.4 | – | 05.02.2021 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| 5. | அ.சா.ஆ.5 | – | பார்வை மகஜர் |
| 6. | அ.சா.ஆ.6 | – | வரைபடம் |
| 7. | அ.சா.ஆ.7 | – | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| 8. | அ.சா.ஆ.8 | – | அகமது ஜையான் என்பவரின் பிறப்பு சான்றிதழ் |

**<u>அரசு தரப்பு சான்று பொருள் –</u>** இல்லை.

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்–</u>** இல்லை.

**<u>எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்–</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | எ.த.சா.ஆ.1 | – | மாவட்ட சமூக நல அலுவலர் அறிக்கை |

ஒம்/திரு.P.காமராசு,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

**<u>பின்குறிப்பு–</u>**

1. எதிரிகள் வழக்கு விசாரணையின் போது ஜாமினில் இருந்து வந்துள்ளார்கள்.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கின் சொத்துக்கள் இல்லை.
4. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

// உண்மை நகல்//

KAMARASU P

Digitally signed by KAMARASU P
Date: 2026.07.13 18:51:11 +0530

நீதித்துறை நடுவர், உத்தமபாளையம்.